**<u>அசல் வழக்கு எண்: 364/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 4th day of July 2025
வா.சா.1 மேராஜிபேகம். க/பெ. ஷேக் காதர்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதியை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி அஸ்கர் அலியின் நண்பர் ஆவார். எனது கணவர் ஷேக் காதர் ஆகும். இந்த வழக்கு அடமான கடன் பத்திரம் எழுதப்பட்ட போது எனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்தார் என்றால் சரிதான். தற்போது இங்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இந்த வழக்கு கடனை தவிர்த்து பிரதிவாதியிடம் எனக்கு வேறு கொடுக்கல் வாங்கல் கிடையாது. அடமான கடன் பத்திரம் எழுதிய போது பிரதிவாதியிடம் நான் எந்த கடன் தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் 500 ரூபாய் தாள்களாக 6 கட்டு கொடுத்தேன். ஒவ்வொறு கட்டிலும் ரூ.50,000/- இருந்தது. நான் எண்ணி பார்த்து தான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். பிரதிவாதி முதலில் எப்போது என்னிடம் அந்த கடன் தொகையை கேட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிக்கு நான் வீட்டில் வைத்து தான் கடன் தொகையை கொடுத்தேன். பத்திரம் பதியும் போது அவரிடம் கடன் தொகை கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடன் பத்திரத்தில் இரண்டு பேர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். அவர்கள் இருவரும் எனக்கு உறவினர்கள் என்றால் ஒருவர் உறவினர் மற்றவர் தெரிந்தவர். அடமான கடன் பத்திரத்தை நான் போட்டோ எடுத்து வெளிநாட்டில் இருந்த கணவருக்கு அலைபேசியில் அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு போட்டோ அனுப்பிய பின்பு இரண்டு வாரம் கழித்து தான் எனது கணவர் எனது கணக்கில் பணம் போட்டார் என்றால் என்னிடம் ஏற்கனவே பணம் இருந்தது. அவர் எப்போதும் போடுவது போல் பணம் போட்டார். உண்மையில் எனது கணவர் எனக்கு பணம் போடவில்லை என்றும் எனது தம்பி அஸ்கர் அலிக்கு தான் பணம் போட்டார் என்றால் அவர்களுக்குள் உள்ள கொடுக்கல் வாங்கல் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்காக தான் எனது கணவர் எனது தம்பிக்கு பணம் போட்டார் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. என்னிடம் இருந்த பணத்தை நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது. அடமான கடன் பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி தனது அசல் கிரைய பத்திரத்தை அடமான கடன் பத்திரம் பதிவு செய்யும் போது நேரடியாக என்னிடம் வீட்டில் வைத்து கொடுத்தார்.

எனது தம்பி அஸ்கர் அலி பிரதிவாதியிடம் சீட்டு போட்டு வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் பிரதிவாதியிடம் சீட்டு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தம்பி பிரதிவாதியிடம் சீட்டு போட்டிருந்தார் என்றும் அதில் ஒன்று என் பெயரில் போட்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது தம்பி சொல்லி தான் இந்த வழக்கு அடமான கடன் பத்திரம் போடப்பட்டது என்றால் சரிதான். எனது தம்பி தான் கூட்டி வந்தார். உண்மையில் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை என்னிடம் கொடுத்தது எனது தம்பி தான் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சீட்டு காசு பாக்கிக்காக எனது தம்பி அந்த அசல் பத்திரத்தை வாங்கி வந்தார் என்றால் சரியல்ல. எனது தம்பிக்கும் எனது கணவருக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை வந்தது என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் பிரதிவாதி என்னிடம் எந்த கடன் தொகையும் பெறவில்லை என்றும் சீட்டு காசு பாக்கிக்காக தான் வா.சா.ஆ.1 அடமான கிரைய பத்திரம் அவரிடம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. 10 மாதம் முடிந்த பின்னர் சீட்டு பணம் பாக்கி பிரதிவாதி என் தம்பியிடம் கொடுத்துவிட்டார் என்றால் அவர்களுக்குள் இருக்கும் கொடுக்கல் வாங்கல் எனக்கு தெரியாது. பிரதிவாதி அடமான கடனை பைசல் செய்ய என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. உண்மையில் அந்த சீட்டு கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக தான் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது என்றும் அந்த தொகையும் பிரதிவாதி பைசல் செய்துவிட்ட நிலையில் இந்த வழக்கில் அவர் எனக்கு எவ்வதி கடன் பாக்கியும் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி பிரதிவாதியிடம் தொகையை பெற்று கொண்டு அடமான கடன் பத்திரத்தை பைசல் செய்ய கேட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கூலி வேலைக்கு செல்பவர் என்றால் அவர் சமையல் வேலைக்கும் செல்வார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |